## வாக்குமூலம்
## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
## வழக்கு எண் :SC.No. 511/2025
## வழக்கு சாட்சி PW–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துகிருஷ்ணகுமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகவேல் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | மணல்காட்டானூர் | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Monday of 27.07.2026.

**(1, 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் மணல்காட்டானூரில் குடியிருந்து வருகிறேன். நான் வியாபாரம் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேதமதிப்பு சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 2022ம் ஆண்டு ஒருநாள் ஆழ்வார்க்குறிச்சி போலீசார் TN 76 B 9130 என்ற மினிபஸ் சேதமடைந்ததை காண்பித்து அதற்கான சேதமதிப்பை கேட்டார்கள். நான் சேதமதிப்பு சான்றிதழ் கொடுத்தேன். அந்த சேதமதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

நானும், அந்த மினி பஸ் ஓனர் வீரபாண்டியன் என்பவரும் உறவினர்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது, மினி பஸ் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்று நான் சொன்னேனா? என்றால் இல்லை. மினி பஸ்சின் முன்பக்க, பின்பக்க கண்ணாடி எந்த தேதியில் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என்னிடம் சேதமதிப்பு மட்டும்

தான் கேட்டார்கள். கண்ணாடிக்கு வருடம் ஆகும் தோறும் மதிப்பு குறையும் என்றால் சரியல்ல. சேதமதிப்பு கொடுக்கும் அளவிற்கு நான் என்ன படிததுள்ளேன் என்றால் இன்ஜினியரிங் படித்துள்ளேன். வாகனத்தின் உதிரி பாகங்கள் நாள் ஆகும் தோறும் மதிப்பு குறையும் என்றால் சரிதான்.

நான் படித்துள்ள படிப்பு குறித்தான ஆவணம் புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த கண்ணாடி என்ன வகையை சார்ந்தது என்று நான் பார்க்கவில்லை. அதை பார்க்க முடியாது. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் மினி பஸ்சை பார்வையிட்டு சேதமதிப்பு சான்றிதழ் வழுங்கவில்லை என்றாலும், மினி பஸ் உரிமையாளர் எனக்கு உறவினர் என்பதினால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சேதமதிப்பை மிகைப்படுத்தி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.30 11:29:29 +0530